(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஓ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரித் தண்டல் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு 12/1972).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவரவர் களே, "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரித் தண்டல் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு என் 12/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என நான் முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1864-ம் ஆண்டு வரித்தண்டல் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 2/1864) 52-வது பிரிவின் கீழ் நில்வரி நீங்கலான ஏனைய வரி பாக்கிகளும், மாநில அரசுக்குச் சேர வேண்டிய மற்றெல்லாத் தொகைகளும், நிலவரி பாக்கியைப் போலவே வசூலிக்கப்படலாம். சென்னையில் உள்ள தமிழ்நாடு வேளாண்-தொழில் கழகம் போன்ற ஓரளவு அரசுப் பங்கு பெற்ற நிறுவனங் களுக்கு சேரவேண்டிய தொகைகளுக்கும், போருக்கு பிந்திய பணிகள்--மறுவாழ்வு நிதி, முன்னாள் படையினர் மறுவாழ்வு சிறப்பு நிதி ஆகியவற்றில் தமிழ்நாட்டிற்குள்ள ஒருங்கிணைந்த பங்கிலிருந்து கொடுக்கப்பட்ட கடன்களையும், முன் பணங் களையும், வசூலிப்பதற்கும் இந்த விதி பொருந்தாது. சென்னையில் உள்ள தமிழ்நாடு வேளாண்--தொழில் கழகம் அல்லது அவ்வப் போது அறிவிக்கப்படக் கூடிய அத்தகைய பிற கழகங்கள் எவருக்கேனும் கொடுத்த அல்லது போருக்கு பிந்திய பணிகள்—மறுவாழ்வு நிதி, முன்னாள் படையினர் மறுவாழ்வு சிறப்பு நிதி ஆகியவற்றில் தமிழ் நாட்டிற்குள்ள ஒருங்கிணைந்த பங்கிலிருந்து எவருக்கேனும் கொடுக்கப்பட்ட கடன்களையும் முன் பணங்களையும் வசூலிப்பதற்கு திறனுள்ள வழிமுறை ஏதுமில்லை.

எனவே மேற்கூறிய தொகைகளை நிலவரி பாக்கியைப் போலவே வசூலிப்பதை உறுதிப்படுத்துவதற்காக தமிழ்நாடு 1864-ம் ஆண்டு வரித்தண்டல் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம்

* 29—3—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்]

2/1864) புதிய விதித்துறை ஒன்றை அமைத்துக் கொள்வதன் மூலம் அச்சட்டத்தை திருத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. இச்சட்டமுன்வடிவு மேற்கண்ட நோக்கத்தை எய்த விழைகிறது.

இதனைப் பேரவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 12 of 1972) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

MR. SPEAKER : There are no amendments.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move :

"That the Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 12 of 1972) be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

(ஔ) 1972-ஆம் ஆண்டு பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (கால வரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு.

THE HON THIRU S. J. SADIQ PASHA : Sir, I move :

"That the Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill,* 1972 (L.A. Bill No 5 of 1972) be taken into consideration.

The Public Wakfs (Extension of Limitation) Act, 1959 (Central Act 29 of 1959) as subsequently amended extends the period of limitation in certain cases for suits to recover possession of immovable property forming part of public wakfs up to the 31st December 1970. Though, availing this provision, a number of

* Published in the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 23rd March 1972.